www.Padasalai.Net விருதுநகர் மாவட்டம் www.Trb Tnpsc.Com

011195

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

-----

# வகுப்பு 12

நேரம் : 3.00 மணி

**வணிகவியல்**

மதிப்பெண்கள்: 90

## பகுதி - அ

அனைத்து **வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **20×1=20**

1) வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை ............ என்பர்.
அ) ஒழுங்கு ஆ) பயன்பாடு இ) வேலைப்பகிர்வு ஈ) சமத்துவம்

2) இணையத்திற்கு நுழைவு வாயில் என்பது ............
அ) போர்டல் ஆ) சிபியு இ) மோடம் ஈ) வெப்நாங்

3) நுகர்வோர் இயக்கத்தின் தந்தை யார்?
அ) மகாத்மா காந்தி ஆ) ஜான் எப் கென்னடி
இ) ரால்ப்நேடர் ஈ) ஜவஹர்லால் நேரு

4) "நுகர்வோரியல்" எனும் சொல் தோன்றிய ஆண்டு
அ) 1960 ஆ) 1957 இ) 1954 ஈ) 1958

5) பங்கு பரிவர்த்தனை சந்தை இவ்வாறு அழைக்கப்படுகிறது.
அ) களச்சந்தை ஆ) உள்ளூர் சந்தை
இ) பத்திரங்களின் சந்தை ஈ) தேசிய சந்தை

6) கீழ்கண்டவற்றுள் கண்ணுக்கு புலப்படாத பொருள் எது?
அ) கல்வி ஆ) கைபேசி இ) ஆடைகள் ஈ) வாகனங்கள்

7) ............ என்பவர் நவீன சந்தையியலின் மன்னர் ஆவார்.
அ) நுகர்வோர் ஆ) மொத்த வியாபாரி
இ) உற்பத்தியாளர் ஈ) சில்லறை வியாபாரி

8) பணிவழியற்ற பயிற்சி எங்கு அளிக்கப்படுகிறது?
அ) வகுப்பறையில் ஆ) வேலையில்லா நாட்களில்
இ) தொழிற்சாலைக்கு வெளியே ஈ) விளையாட்டு மைதானத்தில்

9) முதலில் வேலை, அடுத்து மனிதர் என்பது ஒரு ............ கோட்பாடு.
அ) சோதனை ஆ) நேர்காணல் இ) பயிற்சி ஈ) பணியமர்த்தல்

10) தேசிய பங்குச் சந்தையில் புறத்தோற்றமற்ற பத்திரவர்த்தகம் தொடங்கிய ஆண்டு ............ ஆகும்.
அ) ஜனவரி 1996 ஆ) ஜுன் 1998 இ) டிசம்பர் 1996 ஈ) டிசம்பர் 1998

11) ............ இதுவே உலகின் பழமையான பங்குச் சந்தையாகும்.
அ) இலண்டன் பங்குச் சந்தை ஆ) பம்பாய் பங்குச் சந்தை
இ) தேசிய பங்குச் சந்தை ஈ) ஆம்ஸ்டர்டான் பங்குச் சந்தை

12) மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது எது?
அ) புதுமைப்படுத்துதல் ஆ) கட்டுப்படுத்துதல்
இ) திட்டமிடுதல் ஈ) முடிவெடுத்தல்

13) பின்வருவனவற்றை **சரியாகப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடு:**
i) சந்தைப்படுத்தக்கூடிய சொத்துகள் - அரசுப்பத்திரங்கள்
ii) சந்தைப்படுத்தப்படாத சொத்துகள் - பொதுநிறுவனப் பத்திரங்கள்
iii) கடன் சந்தை - கருவூல ரசீதுகள்
iv) பணச் சந்தை - தேசிய சேமிப்புப் பத்திரங்கள்
அ) 2 3 1 4 ஆ) 2 4 1 3 இ) 4 3 2 1 ஈ) 3 1 4 2

14) வாங்குவோர் ஜாக்கிரதை எனும் கோட்பாடு ............ முன் நடைமுறையில் இருந்தது.
அ) தொழில் வளர்ச்சி ஆ) தொழில் மந்தம்
இ) முற்றுரிமை ஈ) தொழில் புரட்சி

15) செபியின் தலைமையகம் ............ ஆகும்.
அ) கல்கத்தா ஆ) மும்பை இ) சென்னை ஈ) தில்லி

16) நம்பிக்கையற்ற ஊக வணிகர்கள் என்பவர் ............
அ) மான் ஆ) கரடி இ) காளை ஈ) வாத்து

17) குறியிலக்கு மேலாண்மையானது ............ என்பவரால் அமெரிக்காவில் பிரபலப்படுத்தப்பட்டது.
அ) பேராசிரியர் ரொட்டின் ஆ) ஜார்ஜ் ஓடியோர்ன்
இ) ஹென்றிபயோல் ஈ) எப்.டபிள்யூ டெய்லர்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

18) விளம்பரம் என்பது ஒரு ............. ஆட்சேர்ப்பு வளமாகும்.
அ) அக வளங்கள் ஆ) புற வளங்கள் இ) முகவர் ஈ) புறத்திறனீட்டல்
19) ............. ஊழியர்களின் திறமை குறைபாடுகளைத் தடுக்க உதவுகிறது.
அ) பயிற்சி ஆ) வேலை பகுப்பாய்வு இ) தேர்வு ஈ) ஆட்சேர்ப்பு
20) உடனடிச் சந்தை எதன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகிறது?
அ) பொருட்கள் ஆ) பரிவர்த்தனை இ) ஒழுங்குமுறை ஈ) காலம்

## பகுதி - ஆ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**(வினா எண் 30 கட்டாய வினா)** 7×2=14

21) முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA) என்பது என்ன?
22) உடனடிச்சந்தை என்றால் என்ன?
23) ஏலமிடுதல் என்பதன் பொருள் யாது?
24) தரகர் என்று யாரை அழைக்கப்படுகிறார்கள்?
25) பல்வேறு அடையாள ஆதாரங்கள் யாவை?
26) ஆட்சேர்ப்பு முறையில் வேட்டையாடுதல் என்றால் என்ன?
27) பங்கேற்று நடித்தல் முறை என்றால் என்ன?
28) சந்தையிடுகை கலவையின் வரைவிலக்கணம் தருக.
29) ஜான் F. கென்னடி கூறிய நுகர்வோர் உரிமைகள் யாவை?
30) "பொது இடங்களில் புகைபிடிக்கக்கூடாது" என்ற உதாரணத்தின் அடிப்படையில் ஏற்படும் சந்தையிடுதல் எது? குறிப்பு வரைக.

## பகுதி - இ

**ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி.**
**(வினா எண் 40 கட்டாய வினா)** 7×3=21

31) டேலரின் மேலாண்மைத் தத்துவங்கள் யாவை?
32) பணியமர்த்தலின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
33) இரண்டாம் நிலைச் சந்தை - சிறுகுறிப்பு வரைக.
34) கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?
35) காளை மற்றும் கரடி - விளக்குக.
36) புறத்தோற்றமற்ற பத்திர கணக்கிற்கு தேவைப்படும் ஆவணங்களை கூறுக.
37) மனிதவளங்களின் இயல்புகள் யாவை? (ஏதேனும் மூன்று)
38) அடைவுச் சோதனை குறித்து நீவிர் அறிவது யாது?
39) தனியிடச் சந்தை பற்றி விளக்குக.
40) செயற்கைப் பற்றாக்குறை என்றால் என்ன?

## பகுதி - ஈ

**எல்லா வினாக்களுக்கும் விடையளி:** 7×5=35

41) அ) பணி விழி பயிற்சிக்கும், பணி விழியற்ற பயிற்சிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (அல்லது)
ஆ) நிதிச்சந்தையின் பல்வேறு புதிய நிறுவனங்களை விளக்குக.
42) அ) மனிதவள மேலாண்மையின் செயல் பணிகளை விவரி. (அல்லது)
ஆ) ஆட்சேர்ப்பு முறையில் உள்ள அகவளங்களை விளக்குக. (ஏதேனும் 5)
43) அ) சந்தையிடுகையின் பரிணாம வளர்ச்சி பற்றி விவரி. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) ஆட்சேர்ப்பு முறைக்கும், தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி.
44) அ) நுகர்வோரின் கடமைகளை விவரி. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) அரசுப்பத்திரங்களின் இயல்புகளை விவரி.
45) அ) நவீன மேலாண்மையின் கோட்பாடுகளை விவரி. (ஏதேனும் 5) (அல்லது)
ஆ) செபியின் அதிகாரங்களை விவரி. (ஏதேனும் 5)
46) அ) பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? (அல்லது)
ஆ) நுகர்வோர் எவ்வாறு சுரண்டப்படுகின்றனர்?
47) அ) மூலதனச் சந்தையின் சிறப்பியல்புகளை விவாதிக்க. (அல்லது)
ஆ) விதிவிலக்கு மேலாண்மையின் நன்மைகள் யாவை?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com